RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22211

# வைரமுத்து கவிதைகளில் அங்கதம் - ஒரு ஆய்வு

இரா. சசிகலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சென்னை-600099, தமிழ்நாடு, இந்தியா.

# A Study on Satire in Vairamuthu Poems

R. Sasikala [a, *]

[a] Department of Tamil, Soka Ikeda College of Arts and Science for Women, Chennai-600099, Tamil Nadu, India

* Corresponding Author: sasibasnika@gmail.com

Received: 10-01-2022
Revised: 09-03-2022
Accepted: 14-03-2022
Published: 26-04-2022

Check for updates

**ABSTRACT**

Literature is all that is written in broad terms. Literary that delights the learned. Science literature is literature that gives knowledge primarily to the learned Linguistic history. There is no doubt that the meaning of the word 'Aṅkatam', which means sweet taste of fig buds in certain places in the literature, is the correct technique of saying 'Aṅkatam' which is still in use from the Sangam period to the present day. First of all, in today's world, crimes and grievances are indirectly ridiculed and ridiculed without any counter-opinions. Human society may have made great strides in understanding science. Why even set foot on the moon. Yet, the basic human feeling is one that stays with the mind forever with humor. When Mahatma Gandhi spoke about such humor, he once said that if there was no humor I would have committed suicide sometime in my life. Humor occupies an important and prominent place not only in individual human life but also in the film literature of life.

**Keywords:** Satire, Aṅkatam, Vairamuthu Poems, Humor

## முன்னுரை

இலக்கியம் என்பது நமது பாரம்பரியம் பண்பாட்டை எடுத்துக்கூறும் ஒரு கருவூலம் ஆகும். இலக்கியத்தில் நகைச்சுவையும், கிண்டலும், கேலியும் நிறைந்து இருக்கும். ஒரு விஷயத்தை நாம் நேரடியாக சொல்ல முடியவில்லை என்றாலும் அதனை மறைமுகமாக எடுத்துக் கூறும்போது அந்த கருத்தை நகைச்சுவையாக கையாளப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் கூட அங்கதம் மூலம் பல பாடல்கள் வெளிவந்துள்ளன. வைரமுத்து அவர்கள் தன் கவிதைகளில் அங்கதம் பயன்படுத்தி உள்ளார் அதனைப் பற்றி விரிவாக காண்போம்.

இலக்கியம் என்பது விரிந்த பொருளில் எழுதிய அனைத்தையும் குறிக்கும். 'இன்பியல்' இலக்கியம் "கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும்". அறிவியல் இலக்கியம் கற்போருக்கு அறிவைத் தரும். வேகமாக இயங்கி வரும் இந்த உலகில் கவிதை இலக்கியம் சிறப்புபெறும் என்பதில் ஐயமில்லை. இதுபோன்று இலக்கியத்தில் வரும் அங்கதச்சுவை குறிப்பிட்ட இடங்களில், 'அத்தி பூத்தாற் போல', சுவை கூட்டுவதே, 'அங்கதம்' என்னும் இனிய தமிழ்ச் சொல்லின் பொருள். அங்கதம்` என்ற சொல்லும் சரி, நுட்பமும் சரி, சங்ககாலம் முதல் இன்று வரைப் பயன்பாட்டிலுள்ளவையாகும். முதலில் இன்றைய காலப்பகுதியில் குற்றங்களை, குறைகளை, எதிர்க் கருத்துகளை, நேரடியாக அல்லது வெளிப்படையாகக் கூறாமல், மறைமுகமாகக் கூறுகின்ற ஒரு பாடல்வகை நுட்பமே அங்கதம் எனப்படும். ஒரு வகை ஏளனத்துடனோ,

நகைச்சுவையுடனோ அங்கதச் செய்தி அமையலாம். பின்வரும் மேத்தாவின் பாடல் வரிகளைப் பாருங்கள்.

"வழக்கறிஞர்களுக்குள்

கடுமையான

வாதம்-

இறந்து போய்விட்ட

நீதியின் பிணத்தை

எரிப்பதா. . .

புதைப்பதா . . .

என்று !" (Vairamuthu, 2011)

அன்று மேத்தா பாடிய கவிதை வரிகள் இன்றைய நீதிமன்றங்களுக்கு அச்சொட்டாகப் பொருந்திப் போகும் அங்கத நுட்பமாகக் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் கவிஞர் வைரமுத்துவின் கவிதைப் படைப்புகளில் அங்கதம் எவ்வாறு சுவைப் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

## கவிதை வரையறை

கவிதை என்பது உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடு. சொற்களின் கட்டுமானம், உவமை, உருவகம் இன்ன பிற அணிகலன்களால் அழகு பூச்சுக்கள் பூசப்பட்டு அலங்கரிக்கப்படுகிறது.

"உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்

உருவெடுப்பது கவிதை

தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை

தெரிந்துரைப்பது கவிதை" (Subhash Chandra Bose, 2012)

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கவிதைக்குப் பொருள் விளக்கம் அளித்துள்ளார். கவிதையில் பொருள் உணர்த்துதல், மாபெரும் சமூக மாற்றங்கள் போன்ற வகையில் முன்னேற்றங்கள் நிகழவேண்டும். வைரமுத்துவின் கவிதைப் படைப்புகளில் திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம் ,கொடிமரத்தின் வேர்கள் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளில் அமைந்துள்ள அங்கதக் குறிப்புகளை அறியும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## அங்கதம்-விளக்கம்.

அங்கதம் என்பது எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றாகிய "நகை" என்ற சுவையைக் குறிக்கும் நகை குறித்து தொல்பாப்பியர்,

"எள்ளல் இளமை பேதமை மடன்

என்று உள்ளப்பட்ட நகை நான்கென்ப" என்று கூறுகிறார். (Govindasamy Pillai, 1993)

அங்கதம் பற்றிய பல விளக்கங்களும், கருத்துகளும் பலரால் தரப்பட்டுள்ளன. "அங்கதம் என்பது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு" என்பார் டாக்டர் ஜான்சன். "குறைகளின் சீர்திருத்தமே அங்கதத்தின் உண்மையான நோக்கம்" என்பர் டிரைடனும் டிஃபோவும். "தனிப்பட்ட மனிதனின் குறையையோ, ஒரு சமுதாயத்தின் குறையையோ, ஒரு இயக்கத்தின் குறையையோ குறிப்பாகவோ வெளிப்படையாகவோ சுட்டிக்காட்டுவது அங்கதம் என்பது "பிரிட்டானிகா கலைக்களஞ்சியம்" சுட்டும் விளக்கமாகும். "அங்கதம் என்பது அநீதியைச்சாடல் என்ற எண்ணத்தில் இருந்து முகிழ்க்கிறது என்றும், பின்னர் அதுவே ஒரு கலை ஆயிற்று என்றும் கூறலாம். வைரமுத்து

தமது கவிதைகளில் சமுதாய அங்கதம் ,அரசியல் மண்அங்கதம் இவற்றை கையாண்டு இருப்பதாக அறிய முடிகிறது". (Vairamuthu, 2011)

'அங்கதத்தின் தன்மை கூர்மையாகக் குத்திக்காட்டிப் பேசுவது, அதேவேளை நகைச்சுவை மயமாக அமைவது கேலித் தன்மையைப் பூடகமாக, குறிப்பாக, உள்ளடக்கிச் சொல்வது, கேட்போரிடையே சிரிப்பையும், சிந்தனையையும் ஒருசேர உருவாக்குவது என்பது அங்கதத்தின் தன்மை. ஊசிகள் என்னும் கவிதைத் தொகுதி வாயிலாக கவிஞர் மீரா வெளிப்படுத்தியுள்ளார்' (Kavignar Meera, 1999)

## சமுதாய அங்கதம்.

சமுதாயத்தில் காணப்படும் நடுத்தர வர்க்கத்தினரின் நிலை, தரம் தாழ்ந்த இலக்கியம், சாதி, திரைப்படம், இன்றைய கல்வி முறை ஆகியவற்றை இவர் தம் கவிதைகளில் அங்கதப்படுத்துகிறார்.

## நடுத்தர வர்க்கத்தினரின் நிலை

பணிக்குச் செல்லும் நடுத்தர வர்க்கத்தினர் நிலை ஒவ்வொரு மாத இறுதியிலும் படும் துன்பத்தை "இயற்கையோடு இயைந்த வாழ்வு" என்னும் கவிதையில் அங்கதக் குறிப்புப்பட காட்டுகிறார் .வானத்தில் உள்ள பிறை நிலவைக் கண்ட மகன் தந்தையிடம்," ஏனப்பா நிலா சிறியதாகி விட்டது?" என்று கேட்கிறான். தந்தை சிரித்துக்கொண்டே,

"அதுக்கும் நம்மைப்போல்

மாசக் கடைசியோ

என்னவோ மகனே"

என்று பதில் உரைக்கிறார்.

இயற்கையோடு இயைந்த வாழ்வு

என்பது இதுதானோ?.

எந்தமிழர் சொன்னதும்

சரிதானோ". (Vairamuthu, 2011)

என்று கேட்பது போல் அங்கதக் குறிப்புப் பட அமைந்துள்ளது. மாதக்கடைசியில் இத்தகையக் குடும்பங்களில் ஏற்படும் பணத்தட்டுப்பாட்டைப் பிறைநிலவுக்கு ஒப்பிட்டுக் காட்டியிருப்பதைக் காணலாம்.

## திரைப்படம்

திரைப்படம் மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் முறையினைக் காட்டுகிறார்.கல்லூரி மாணவர்கள் தாம் இருக்கும் விடுதி அறைச் சுவர்களுக்கு வெள்ளையடிப்பதை விரும்பவில்லையாம். அதற்கு காரணமாக,

"சுவரில் வெள்ளை அடித்தால்

சினிமாக்காரர்களின்

முந்நூறு முகவரிகள்

மொத்தமாய் அழியுமே " (Vairamuthu, 2016)

என்று கூறுவதில் கல்வி ,தாங்கள் வாழும் அறைத் தூய்மை இவற்றைக் காட்டிலும் அவர்களுக்குத் திரையுலகினரின் முகவரிகள் தேவையானதாக மாறிவிட்ட நிலையைக் காட்டி அங்கதக் குறிப்போடு ஏளனம் செய்கிறார்.

## இன்றைய கல்விமுறை

இன்றைய இளைஞன் பெறும் பட்டத்தினால் எவ்வித பயனுமில்லை என்பதையும் நயமாக எடுத்துரைக்கிறார். இந்தியா வாங்கிய சுதந்திரத்திற்கும், இளைஞன் வாங்கிய பட்டத்திற்கும் வித்தியாசம் இல்லை என்று கூறும் கவிஞர்,

"இரண்டும் இருப்பது

சட்டத்தில் தான்" (Vairamuthu, 2016)

என்று கூறுவது பட்டங்கள் கண்ணாடிச் சட்டத்திற்குள் வைத்து அழகு பார்ப்பதற்குப் பயன்படும் நிலையை வேலைவாய்ப்பிற்குப் பயன்படாத நிலையையும் அங்கதக் குறிப்போடு காட்டுகிறார் . படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், இளமையிலேயே முதுமையாக அவர்கள் தோற்றம் அளிப்பதையும்,

"எம்பிளாய்மென்ட் அட்டையில்

புதுப்பிக்கும் தேதியைத்

தேடித் தேடியே

கண்களில் வெளிச்சம்

கரைந்து விட்டதா?" (Vairamuthu, 2014)

என்ற கவிதையின் மூலம் வெளிக்காட்டியிருக்கிறார்.

## அரசியல் அங்கதம்

இக்காலக்கட்டத்தில் ஆட்சியாளரிடையே காணப்படும் அரசியல் சீர்கேடுகளைக் சுட்டிக்காட்டுவதில் சிறப்பிடம் பெறுகிறார். இதில் விடுதலை, அரசியல் ஆட்சிமுறை ஆகிய பகுதிகளில் அந்த குறிப்பைக் காட்டுகிறார்.

## விடுதலை

இந்திய நாடு அடிமைத்தளையினின்றும் நீங்கி சுதந்திரம் பெற்று விட்ட நாடு. ஆனால் சுதந்திரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்க வில்லை என்ற நிலையினை அங்கதக்குறிப்புப்பட எடுத்துக்காட்டடி இருப்பதைக் காணலாம்.

"சுதந்திர வெளிச்சம்

சேரியில் விழாமல்

மாளிகை நிழல்களே

மறைத்துவிட்டன". (Vairamuthu, 2011)

என்று கீழ்மட்டத்தில் இருக்கும் மக்களுக்கு சுதந்திரம் இல்லாத தன்மையினையும், அவர்களை மேல் மட்டத்தினர் இன்னும் அடிமையாகவே வைத்துள்ள தன்மையினையும் சுட்டிக்காட்டுகிறார்.

"அப்பனின் திருவோட்டை

புத்திரனுக்கு

இது

புதுப்பித்து தந்தது". (Vairamuthu, 2011)

என்றும்,

வெளிநாட்டு இட்ட

விலங்கை உருக்கி

உள்ளூர் விலங்குகள்

உற்பத்தி செய்தது". (Vairamuthu, 2011)

என்றும் சுதந்திரத்திற்குக் கவிஞர் தரும் விளக்கம் விடுதலை அடைந்தும், எவ்வித மாற்றமும் ஏற்படாமல் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றும் இந்தியர்களிடையே அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையை அங்கதக் குறிப்புடன் விளக்குகிறார்.

இன்றைய சட்டசபையையும், அதன் நடவடிக்கைகளையும் கேலி செய்யும் கவிஞர் சட்டசபைகளைக் கோவிலுக்கு உவமையாக்குகிறார் .இன்னும் கொஞ்ச நாட்களில் அத்தனை சட்ட சபைகளும் ஆலயங்கள் ஆகலாம் என்று கூறுவதில் ஆலயம் போன்று சட்டசபையும் புனிதமான இடமாக ஆக்கப்படும் என்று நினைக்கத்தோன்றும். ஆனால்,

"அங்கும்

செருப்போடு நுழைவது

தடை செய்யப்படலாம்" (Vairamuthu, 2016)

என சட்டசபைக்குள் நடைபெறும் நாகரிகமற்ற செயல்கள், செருப்பு வீச்சு போன்றவை நிகழாமல் இருக்கவே என்று காட்ட அங்கதக் குறிப்பினைப் பயன்படுத்தியிருக்கிறார். இதேபோன்று கவிஞர் மீரா அவர்களும் அரசியல் அங்கதம் பற்றி கூறியுள்ளார்.

அரசியலைப் பற்றியே மிக அதிகமாக எள்ளி நகையாடுகிறார் மீரா. 11 கவிதைகளில் இன்றைய அரசியல் பற்றிக் கூறியுள்ளார். வேகம், வறுமையே வெளியேறு, மேயர் மகன் தோட்டி மகனுக்கு கூறியது, பழக்கம் பொல்லாதது, ஆனைமாதிரி, அடியேன் பறைவது, ஜனநாயக சோஷலிஸம், எதிரொலி, துண்டு விழுந்தது, கொடுத்து வைத்தவர், ஒன்றே செய்க- என்ற கவிதைகளில் அரசியல் பற்றிய எள்ளலைக் காண்கிறோம். இவற்றில் ஏழு கவிதைகளில் அரசியல்வாதிகளுக்கே ஊசி குத்துகிறார்.

அரசியல் வாதிகளின் வேகம் நாட்டை முன்னேற்றுவதில் இல்லை. வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் இல்லை, பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கோடு கட்சி மாறுகிறார்கள். வேகமாக கட்சி மாறுவதற்கு வசதியாக நாட்டில் இன்னும் அதிகமாக கட்சிகள் இல்லையே என்று கவலைப்படும் அரசியல் வாதிகளின் போக்கை கவிஞர் மீரா,

"எங்கள் ஊர் எம். எல்.ஏ

ஏழு மாதத்தில்

எட்டுத்தடவை

கட்சி மாறினார்

மின்னல் வேகம்?

இன்னும் எழுபது

கட்சி இருந்தால்

இன்னும் வேகம்

காட்டி இருப்பார் ...

என்ன தேசம்

இந்தத் தேசம்! (Kavignar Meera, 1999)

மின்னல் வேகத்தில் ஏழு மாதத்தில் எட்டுத்தடவை கட்சிமாறும் அரசியல் வாதிகளைக் கொண்ட இந்த தேசம் என்ன தேசம் என்று அரசியல் வாதிகளைச் சாடுகிறார்.

## முடிவுரை

பொதுவாக இருபதாம் நூற்றாண்டு சமுதாயத்தையும் தனி மனிதனையும் பாடுபொருளாகக் கொண்டிருப்பதால் சமுதாயச் சீர்கேடுகள் பெரிதும் சாடப்படுகின்றன. ஒரு கருத்தை முகத்துக்கு நேராக கருத்துக்களைச் சொன்னால் அதனை பலரால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனையே முகத்துக்கு நேர் சொல்லாமல் யாரையோச் சொல்வதுபோல் கிண்டலாகவும், நகைச் சுவையாகவும் சொன்னால் அதனை நமக்கு என்று ஏற்றுக்கொள்ளவும் முடியாது ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க முடியாது. அதனால் தான் இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு அங்கத இலக்கியச் சுவையைப் பயன்படுத்துகின்றனர். அங்கதம் இதற்கு மிகச் சரியானதொருக் கருவியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வைரமுத்து தம் கவிதைகளில் சமுதாய அங்கதம் ,அரசியல் அங்கதம் என்பனவற்றை சிறப்பாக பயன்படுத்தி வெற்றியும் பெற்றிருக்கிறார்.

## References

Govindasamy Pillai, R., (1993) Tholkappiyam, Saraswathi Mahal, Thanjavur, India.

Kavignar Meera, (1999) Oosigal, Annam Pathippagam, Thanjavur, India.

Subhash Chandra Bose, (2012) Tamil Ilakkiya Varalaru, Yazh Publication, Chennai, India.

Vairamuthu, (2011) Thiruthi Eluthiya Theerpugal, Kizhakku Pathippagam, Chennai, India.

Vairamuthu, (2014) Kodimaraththin Vergal, Thirumagal Nilayam, Chennai, India.

Vairamuthu, (2016) Innoru Desiya Geetham, Thirumagal Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License